தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இன்னும் எவ்வளவோ வசதிகள், வாய்ப்புகள் அதிலே இருந்து கொண்டிருக்கின்றன. அந்த வாய்ப்பு முழுவதும் கிடைக்குமளவிலே அந்தப் பரிந்துரைகளின் மீது தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திலே முதல்வரவர்களால் அளிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை, ஏழைகளின் வரப்பிரசாதமாக இருக்கின்ற இந்த அறிக்கையை மீண்டும் மனமாரப் பாராட்டி, வரவேற்று, அதற்காக என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

50. Notification issued with Roc. No. 188981/70-E5, dated the 19th April 1971, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 relating to drainage in the area of Thirumangalam Town Panchayat of Madurai District. [*Laid on the Table of the House under section* 179 (4) *of Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act* XXXV *of* 1958).]

B. *Reports, Notifications and Other Papers.*

53. Notification issued with G.O. Ms. No. 710, Labour, dated the 19th June 1971, in regard to an amendment to the Tamil Nadu Factories (Welfare Officers) Rules, 1953.

54. Notification issued with G.O. Ms. No. 926, Labour, dated the 3rd August 1971 in regard to an amendment to the Tamil Nadu Factories Rules, 1950.